


# ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

ஆலயத்தில் ஒரு வாழ்க்கை


**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
-----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com)

1976 ஆம் ஆண்டு நான் தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் இருந்த அருணாசலா மலை அடிவாரத்தில் வாழ்ந்து விட்டு 1950 ஆண்டில் மறைந்து போன இரமண மகரிஷியின் ஆசிரமத்திற்கு செல்ல ஆர்வம் கொண்டு இந்தியாவுக்குப் பறந்து வந்தேன். அந்த ஆசிரமத்திற்குச் சென்று பல வருடங்கள் வாழ விரும்பினேன். ஆனால் அங்கு சென்ற பினனர் தான் புது விருந்தினரை அந்த ஆசிரமத்தில் மூன்று நாட்கள் மட்டுமே வசிக்க அனுமதிப்பார்கள் என்பது தெரிந்தது. ( பிறகு இருபத்தி நான்கு வருடங்கள் அங்கு இருந்தேன் ) அதனால் தங்குவதற்கு வேறு இடம் தேடினேன். சில மணி நேரத் தேடுதல் வேட்டைக்குப் பின் அரை ஏக்கர் நிலத்தில் மரங்கள் சூழ அமைந்து இருந்த ஒரு வீட்டில் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்த அறையில் தங்க இடம் கிடைத்தது. வாடகை அறுபத்தி ஆறு சென்ட்ஸ் ( அமெரிக்க நாணயத்தில் கூறி உள்ளார் -சாந்திப்பிரியா ) அதுவே அந்த காலத்தில் அதிகத் தொகை ஆகும். ஆனால் தனிமையும் அந்த தோட்டத்து சூழ்நிலையும் எனக்குப் பிடித்து இருந்தது.



*1979 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட என்னுடைய பாஸ்போர்ட் புகைப்படம். நான் கண்ணப்பா ஆலயத்தில்1977 முதல் 1978 ஆம் ஆண்டுவரை நான் இருந்த பொழுது என்னிடம் இருந்த 1970 ஆம் ஆண்டைய புகைப்படம் அது மட்டுமே..*

சுமார் ஒன்றரை வருடம் மிக வசதியாக இருந்த எனக்கு அந்த வாடகை வீடு கட்டுப்படி ஆகவில்லை. ஆகவே ஒரு மைல் தொலைவில் இருந்த ஒரு வீட்டில் வேலையில் சேர்ந்தேன். ஒன்பது மாதங்கள் கழிந்ததும் அந்த வீட்டு முதலாளி வந்து விட வீட்டைக் காலி செய்து கொண்டு வேறு இடம் தேடும்படி ஆயிற்று. எனக்கு தனிமையில் அமர்ந்து கொண்டு தியானம் செய்ய வசதியான இடம் தேவைப்பட்டது. அப்பொழுது அந்த மலையில் ஒதுக்குப்புறமாக இருந்த பாழடைந்த ஆலயம் ஒன்று என் கண்களில் பட்டது. அதை பாழடைந்த ஆலயம் என்று ஏன் கூறினேன் எனில் அங்கு எந்த

## ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*


மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
-----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com)


தெய்வத்தின் சிலையும் கிடையாது. அதை பல வருடங்களுக்கு முன்பாக எவரோ திருடிக் கொண்டு சென்று விட்டிருந்தனராம். அந்த கோவிலின் பின்புறத்தில் தாமரை வடிவில் இருந்த குளத்தின் நடுவில் ஒரு வழிபாட்டுச் சிலை இருந்திருந்திருக்கின்றது. அந்த கட்டிடத்திலோ விளக்கு இல்லை, குழாய் இல்லை, கதவும் இல்லை. அதில் வசதிகள் இல்லை எனினும் அதுவே எனக்குக் கிடைத்த இடம். தரை எங்கும் ஆட்டுப் புழுக்கைகள சிதறிக் கிடந்தன. சிறிய அளவில் மட்டுமே இருந்த அந்த அறையில் குறுக்குவாட்டில் படுத்தால் மட்டுமே கால்களை நீட்டிப் படுக்க முடியும் என்ற அளவில் இருந்தது அந்த இடம். அங்கிருந்து நோக்கினால் அந்த ஊரின் முழு காட்சியும் அற்புதமாகத் தெரியும். ஆகவே அந்த இடமே நான் தங்கிக் கொண்டு அமைதியாக தியானிக்கத் தகுந்த இடம் என முடிவு செய்தேன்.



*1986 ஆம் ஆண்டு கண்ணப்பர் ஆலயத்திற்கு நான் மீண்டும் சென்ற பொழுது இருந்த பாழடைந்த நிலை நான் முதன் முதலில் அங்கு சென்ற பொழுது இருந்த நிலையை எடுத்துக் காட்டுவது போல அமைந்து இருந்தது.*

ஊள்ளூரில் இருந்த தச்சர்களைக் கொண்டு திருடர்கள் புக முடியாத பலமான கதவு போட்டேன். என்னிடம் திருடிக் கொண்டு போக எதுவும் இல்லை என்றாலும் தனிமையில் இருந்த இடம் என்பதினால் என் பாதுகாப்பை கருதி அதை

செய்தேன். சாதாரணமாக வெளிநாட்டினர் என்றால் அவர்களிடம் நிறையவே பணம் இருக்கும் என நினைத்து இருந்தக் காலம் அது. திருடர்கள் வந்து பார்த்தப் பின்னா ் ஒன்றும் கிடைக்கவில்லை எனறால் அவர்கள் பொருளை எங்கோ பதுக்கி வைத்து இருக்கின்றார்கள் என இன்னும் அதிகமாக சந்தேகப்படுவார்கள். ஓரிரு நாட்களில் நான் அங்கு குடி புகுந்தேன். பாழடைந்த ஆலயத்தில் கதவைப் பொறுத்திக் கொண்டிருந்ததினால் நான் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் சேர்ந்து விடவில்லை. ஆனால் மனதில் நானும் ஒரு இடத்திற்கு சொந்தக்காரன் ஆகி விட்டேன் என்பது போன்ற நினைப்பு ஏற்பட்டது.

கானடாவில் பௌடர் என்ற இடத்தில் ஒருசிரிப்புக் கதை உண்டு " வீட்டில் விளக்கை மாற்ற எத்தனை பேர் தேவைப்படுவார்கள் ? " என்று கேட்டால் கடைக்கும் விடை "ஒருவரும் இல்லை " ஏன் எனில் விளக்கு வெளிச்சம் அற்ற இடத்தில் அனைவரும் வாழ்பவர்கள். அங்கு மின்சாரம் கிடையாது. எனக்கு வெளிச்சம் தேவை என்பதற்காக ஒரு மண்ணெண்ணை விளக்கை வாங்கினேன்.

வீட்டைத் தள்ளி சுமார் முப்பது மீட்டர் தொலைவில் காட்டை அழித்து இருந்த இடத்தில் குழி ஒன்றைத் தோண்டி அதை கழிவிடமாக மாற்றிக் கொண்டேன். அப்பொழுதெல்லாம் காட்டை புதுப்பித்து செடிகளை வளர்ப்பது அவரவர் சொந்த விருப்பம். நான் தினமும் அங்கு சென்று மலம் கழித்தப் பின் மண்ணைப் போட்டு அதை மூடிவிட்டு வந்து விடுவேன். அடுத்த நாள் காலையில் இன்னும் சிறிது இடைவெளி விட்டு அடுத்த குழி தோண்டி அதை உபயோகிப்பேன். இப்படியாக் இடத்தை மாற்றி மாற்றி கழிவிடம் ஆக்கிக் கொண்ட சில நாட்களில் நான் மூடி இருந்த அந்த இடங்களில் தக்காளிப் பழச் செடிகள் தோன்றி இருந்தன. ஒருவேளை எனக்கு ஜீரணம் ஆகாமல் வெளியேறிய பொருளில் இருந்து அவை வெளி வந்திருக்கலாம். அடுத்த மூன்று மாதங்களில் நிறைய செடிகள் அப்படித் தோன்றின. அவற்றில் இருந்து கிடைத்த காய்களை உண்ட பொழுது எனக்கேற்பட்ட சந்தோஷம் ஒரு விதமான அனுபவம் அல்லவா?

ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

TEMPLE TIMES

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்

-----------------------

டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு

------------------------

சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com

## ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com

அடுத்தப் பிரச்சனை, தண்ணீர். நல்ல வேளையாக சுமார் 200 மீட்டர் தொலைவில் இருந்த பாழடைந்த கிணற்றில் இருந்து கிடைத்த தண்ணீர் எனக்கு குடிநீராகப் பயன்பட்டது. அடுத்து சில மீட்டர் துாரத்தில் ஒரு விவசாயி டீசல் பம்பின் மூலம் வயலுக்கு நீர் இறைப்பதைக் கண்டேன். நீர் இறைக்கும் அந்த நேரங்களில் அங்கு சென்று சுமார் ஐந்து அடி உயரத்தில் இருந்து கீழே விழும் நீர் பிரவாகத்தில் குளிக்கத் துவங்கினேன். சுமார் 80 டிகிரிக்கும் குறைவான அளவில் இருந்த வெட்ப நிலையில் குளிப்பது ஆனந்தமாகவே இருந்தது.

அங்கிருந்து ஐந்து நிமிடம் நடந்து சென்றால் உண்ணாமலை தீர்த்தம் என்ற குளத்தருகில் செல்ல முடியும். அதன் அர்த்தம் “ பால் பருகப்படாத மார்பகங்களைக் கொண்ட பெண்ணின் புனிதக் குளம் ” அந்தப் பெண்மணி சிவபெருமானின் மனைவியான பார்வதி தேவி ஆவார். நான் இருந்த இடத்திற்கு கீழ் பகுதியில் இருந்த அருணாசலா என்ற அந்த மலை சிவபெருமானுடைய அவதாரமாகவே கருதப்பட்டு பல்லாயிரக்கணக்கான தென் இந்திய மக்களால் வணங்கப்பட்டது.

தீர்த்தம் என்பது அங்கு வரும் பயணிகளுடைய உபயோகத்திற்காக மக்களால் ஏற்படுத்தப்பட்டவை. அவை பிரமிடுகளை திருப்பி வைத்திருப்பது போன்ற தோற்றத்தைத் தரும். அருணாசலத்தின் கிக்குப் பகுதியில்மலை மீது இருந்து வெளியேறி வந்த தண்ணீர் உண்ணாமலை தீர்த்தத்தை நிரப்பும். அதை குளிப்பதிற்கும் துணிகளைத் துவைப்பதிற்கும் அனைவரும் பயன் படுத்தினர். மற்ற தீர்த்தங்கள் குடி நீருக்குப் பயன் படுத்தப்பட்டன. அடியில் பாசி பிடித்துப் பச்சையாக தெரியும் அந்த நீரை குடிக்க உபயோகிப்பவர்கள் நல்ல உடல் நிலையைக் கொண்டு இருக்க வேண்டும். இல்லை எனில் வியாதிதான்.

அங்கிருந்த தீர்த்தங்களிலேயே உண்ணாமலைத் தீர்த்தம்தான் பெரிய குளம். மழை காலத்தில் நீர் நிறம்பி வழியும். அதில்தான் நான் சென்று நீச்சல் அடிப்பேன். அந்த தீர்த்தத்தில் உள்ளிருந்து மேலே வெளிவந்து நிற்கும்

ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

TEMPLE TIMES

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
-----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com

பாறைகளில் அமர்ந்தபடி சுற்று முற்றுக் காட்சிகளைக் காண்பது தனி இன்பம் தரும்.

அந்த தீர்த்தத்தில் இருந்து மலை வழியாக யாத்திரை செய்யும் பொழுது வழியில் ஒரு பெரிய கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ளகல் மண்டபம் தெரியும். அது பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது. வருடத்துக்கு ஒரு முறை எட்டு மைல் சுற்றுக்கு அமைந்து உள்ள அந்த மலையின் அடிவாரத்தின் வழியாக தெய்வத் திருஉலா நடைபெறும். ஓவ்ஒரு மைல் கல்லைத் தாண்டியதும் வழியில் உள்ள ஆலயத்தில் அந்த தெய்வச் சிலைகள் வைக்கப்பட்டு உள்ளூர் மக்களினால் வழிபடப்படும். பக்கிங்காம் அரண்மலைப் போல இந்தக் கட்டிடம் மிகப் பெரிய அளவில் இருந்தாலும் வருடத்தில் சில மணி நேரம் மட்டுமே பயன் படுத்தப்பட்டது. மாபெரும் கருங்கல் மண்டபம் அது. அது சிவபெருமான் தான் களைப்பாற வந்து அமரும் இடமாம்.

அந்த மண்டபத்து நுழை வாயிலில் இந்துகளின் தேவதைகளை பல்வேறு காட்சிகளில் காட்டும் சிற்பங்கள் செதுக்கப்பட்ட தூண்கள் உண்டு. கல்லினால் கட்டப்பட்டிருந்த மேல் கூறை விரியத் துவங்கிய பொழுது அந்த தூண்கள் தனிமையில் நிற்பது போல காட்சி தந்தன. அதைப் பார்க்கும் பொழுது அந்த மண்டபம் இடிந்து விழுந்து விடுமோ என்ற அச்சம் தோன்றினாலும் அவை பல நூற்றாண்டுகளை கடந்து இடிந்து விழாமல் இன்றும் நிற்கின்றன என்பதே உண்மை.

நான் அந்த மண்டபத்தின் வழியாகச் செல்லும் பொழுது உள்ளே சென்று அந்த மண்டபத்தின் பொந்துக்களில் குடி இருக்கும் சாம்பல் கலந்த நீல வெளவால்களைப் பார்ப்பதுண்டு. அந்தப் பொந்துக்களில் இருந்து பெரிய கண்களால் அவை நம்மை பார்த்தபடி இருப்பது ” நான் உன்னைக் காண முடியும், ஆனால் உன்னால் என்னிடம் வர முடியாது ” என்று கூறி நம்மைப் பார்ப்பது போல இருக்கும்.

உண்ணாமலைத் தீர்த்தத்தில் சென்று நான் என் துணிகளைத் துவைப்பது உண்டு. அதன் பின் அங்கிருந்த பாறைகளில் துணிகளைக் காயப்போட்டு எடுத்து வந்து

விடுவேன். அவைகளில் பல கற்கள் ஆலயத் தூண்களை பழுது பார்த்த பொழுது விட்டுவிட்டுச் சென்ற தேவை அற்ற பாறைகள். அவற்றில் சிலவற்றில் காமவெறி கொண்டு காட்சி தரும் தம்பதியினர் உறவு கொள்ளும் மோசமான காட்சி செதுக்கப்பட்டு இருந்தன.

என் துணிகள் ஒரு மணிநேரத்தில் காய்ந்து விடும் . அதுவரை மற்ற காட்சிகளை இரசித்தபடி இருப்பேன். கால் நடை பிராணிகளை அங்கு விவசாயிகள் அழைத்து வந்து குளத்தின் கரையில் நிற்க வைத்து அவற்றைத் தேய்த்துக் குளிப்பாட்டுவார்கள். அதற்கு எதிர் பக்கம் பயணிகள் தங்களுடைய துணிகளைத் துவைத்தபடியும் குளித்துக் கொண்டும் இருப்பார்கள். குளிக்க வரும் பெண்களோ தாங்கள் உடுத்தி வரும் ஒரே துணியை சில அடி துணியை மட்டும் பணன்படுத்தி உடம்பை மறைத்துக் கொண்டு மற்ற பகுதியை துவைப்பார்கள். ஒரு முனையை மற்றொரு பெண் பிடித்துக் கொள்ள அவர்கள் அதை குளத்துக் கரையில் அங்கும் இங்கும் நடந்து கொண்டே காய வைப்பதைப் பார்க்கும் பொழுது ஆச்சரியமாக இருக்கும். அப்படி நடந்து கொண்டே துணியை உலர்த்திக் கொண்டு சில மணி நேரத்தில் வீடு போய் சேர்ந்து விடுவார்கள்.

துணிகளை துவைக்க சோப்பு உபயோகப்படுத்தினால் அதிக செலவாகும் என்பதினால் துணிகளை தண்ணீரில் நனைத்து பாறைகளில் அடித்து அழுக்கைக் களைவார்கள். எப்பொழுதாவது சிறிய கட்டி சோப்பைப் பயன்படுத்தினர் என்றாலும் அடித்துத் துவைத்துத்தான் துணிகளை வெளுப்பார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்த மார்க் தைவான் என்ற வெளிநாட்டவர் பாறைகளை உடைக்க ஏன் நனைத்த் துணிகளை உபயோகித்துக் கஷ்டப்படுகின்றனர் என வியந்ததுண்டாம்.

ஆலயத்தில் இருந்து வீடு திரும்பும் பொழுது முதல் கிணற்றில் இருந்து இரண்டு பக்கெட் தண்ணீர் கொண்டு வருவது உண்டு. அது உணவு தயாரிக்க, குடிக்க மற்றும் சுத்தப் படுத்த என அனைத்திற்கும் போதுமானதாக இருந்தது. அங்கிருந்து நாலு கல் தொலைவில் இருந்த திருவண்ணாமலை

## ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
-----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com

**ஆலயத்தில் ஒரு வாழ்க்கை**

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*


**மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்**

-----------------------

**டேவிட் காட்மன்**
**(DAVID GODMAN)**

**தமிழ் மொழி பெயர்ப்பு**

------------------------

**சாந்திப்பிரியா**
**(SANTHIPRIYA)**
**(nrj_1945@yahoo.com**


என்ற ஊரில் இருந்து கெரசின் அடுப்பு வாங்கி வந்திருந்தேன். அதில்தான் நான் சமையல்கள் செய்து வந்தேன். வாரம் இரண்டு முறை நான் அந்த மலையை சுற்றி உள்ள எட்டு மைல் துாரத்தை நடந்தே கடப்பதை வழக்கம் ஆக்கிக் கொண்டேன். ஐந்நுாறு ஆண்டுகளுக்கு முன் பாதை எத்தனை அளவுக்கு நீண்டு உள்ளது என்பதை தெரிவிக்கும் மைல் கல்கள் சில அரசர்களினால் வைக்கப்பட்டு இருந்தது. அவை அங்கொன்றும் இங்கொன்றுமாகக் பூமியில் புதைந்துக் கிடந்தன. மலையை சுற்றி நடக்கும் பொழுது பிரதர்ஷணமாக வலப்புறத்தில் இருந்துதான் சுற்றி நடக்க வேண்டும். அதுதான் பரம்பரை பரம்பரையாக வந்த பழக்கம். நான் திருவண்ணாமலை நகர் வழியாகச் செல்லும் பொழுது சில நாட்களுக்கு எனக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவேன். சாதாரணமாகவே எனக்கு நடக்கப் பிடிக்கும்.

அருணாசலாவை சுற்றி நடக்க சுமார் மூன்று மணி நேரம் பிடித்தது. வழியில் உள்ள ஆலயங்களில் சில சமயங்களில் ஓய்வு எடுக்கத் தங்குவேன். அது போலவே டீக்கடை, தாகம் தணிக்க இளநீர் விற்கும் இடம் போன்றவற்றில் தங்கினால் இன்னும் அரை மணி நேரம் கூடுதலாகவே ஆகும். ஆனால் அது குறித்து நான் கவலைப் படவில்லை. நம்பிக்கையின்படி அந்த மலையை சுற்றி மெல்ல மெல்ல மெல்ல ஒரு நிறை மாத கர்பிணிப் பெண் போல நடக்க வேண்டுாம். என்னை இந்த இடத்திற்கு கொண்டு வந்த இரமண மகரிஷி அதைக் கடக்க மூன்று நாட்கள் எடுத்துக் கொண்டார். ஏன் எனில் 1920 ஆம் ஆண்டு கால கட்டத்தில் அந்த வழி நெடுக அடர்ந்த காடாக இருந்தது. வழியில் புலியும், சிறுத்தையும் தென்படுமாம். 1970 ஆம் ஆண்டில் அந்த வழியாக செல்பவர்கள் அனேகமாக பிச்சைக்காரர்களாகத்தான் இருந்தனர்.

அருணாசலாவைச் சுற்றிய பகுதி புனிதமானது. கால்களில் பாதணி இல்லாமல் நடக்க வேண்டும். ஐரோப்பியர்கள் அப்படி நடைப் பயணத்தை மேற்கொண்ட பொழுது அவர்கள் கால்கள் இரணமாகி விடும். ஆனால் மீண்டும் சில நாட்களுக்குப் பிறகு அது பழகிவிடும்.



*இரமணாசிரமத்தில் 1978 முதல் 1985 ஆம் ஆண்டுவரை நான் நிர்வாகித்த வாசகசாலை*

ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

TEMPLE TIMES

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்

-----------------------

டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு

------------------------

சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com

நான் திருவண்ணாமலைக்கு வந்தப் பின் காலணி அணிவதை விட்டுவிட்டேன். ஒரு ஜோடி செருப்பை சென்னைக்குச் செல்லும்போது மட்டும் உபயோகிக்க வைத்திருந்தேன். இரண்டு வருடங்கள் அப்படி இருந்தேன். நான் பாதணிகளை உபயோகப்படுத்தாததினால் என் பாதங்கள் குறுக்களவில் மிகவும் பெரியதாகி விட்டிருந்தன. 1980 ஆம் ஆண்டு என நினைக்கின்றேன், நான் மீண்டும் பாதணிகளை உபயோகிக்க முயன்ற பொழுது குறுக்குவாட்டில் என் காலணிகளின் அளவு மிகவும் பெரியதாக ஆகி இருந்தது தெரிய வந்தது.

நான் அரைக்கால் சட்டைகளைப் போடுவதையும் நிறுத்தி இருந்தேன். தென் இந்தியர்கள் அனேகமாக ஐந்து அடி நீளமான மெல்லிய வேட்டியைதான் உடுத்திக் கொண்டனர். நான் இந்தியாவில் வந்து தங்கி ஒருவருடம் ஆன பொழுது ஐரோப்பிய உடைப் பழக்கத்தை முற்றிலும் விட்டு விட்டிருந்தேன். நான் வெள்ளை வேட்டி மற்றும் வெள்ளை பனியன் ணிந்து கொள்ளத் துவங்கி இருந்தேன். பனியன் என்பது டீ சட்டையைப் போல காலர் இன்றி உள்ள ஆடை. காலணி உபயோகிப்பதை முற்றிலும் நிறுத்தி விட்டிருந்தேன். அறுபது சென்ட் (அமெரிக்க நாணயத்தில் கூறி உள்ளார் -சாந்திப்பிரியா) வாடகையாகக் கொடுத்த பொழுது என்னிடம் இருந்தது ஒரே ஒரு வேட்டி மட்டுமே. அதை இரவில் அவிழ்த்து அதை துவைத்து உலர்த்திவிட்டு மறு நாள் காலை அதையே அணிந்து வந்தேன். அனேகமாக அந்த நூல் வேட்டிகள் நான்கு அல்லது ஐந்து மாதங்களே உழைத்தன. அதனால் அந்த வேட்டி கறை பட்டு அழுக்காகி விட்டாலோ அல்லது கிழியத் துவங்கினாலோ மட்டுமே நான் நகருக்குச் சென்று ஐம்பது சென்ட் விலை (அமெரிக்க நாணயத்தில் கூறி உள்ளார் -சாந்திப்பிரியா) கொடுத்து வேறொரு வேட்டி வாங்கி வருவேன். கிழிந்து போன வேட்டிகள் என் கைகுட்டையாகவும், வீட்டு சாமான்களை வைக்கும் பையாகவும் உரு மாறின.

என்னுடைய மற்றொரு நண்பனான மைக்கேல் என்பவன் நான் திருவண்ணாமலைக்கு வந்த அடுத்த ஒரு மாதத்தில் வந்தார். இருவரும் பல வருடங்கள் ஒன்றாகவே தங்கினோம்.

அவருடைய தாத்தா பிரிடனில் கன்சர்வேடிவ் பார்ட்டி என்ற கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர். மைக்கல்லின் சொந்த ஊர் ஹேப்பிரிடியன் என்ற இடம். ஒரு நாள் அவர் என்னிடம் வந்து அவருடைய பாட்டி பெங்களுருக்கு உலா வந்திருப்பதாகவும் அவளை சந்திக்கும்படி அவருடைய வீட்டில் இருந்து தகவல் வந்து உள்ளதாகவும் கூறினார். அதனால் அவனுடைய தாயார் அவரை கால்சட்டை ( பேண்ட் ) அணிந்து கொண்டு செல்லுமாறும் இல்லை எனில் அவரை நாடோடி என பாட்டி நினைத்து விடுவாள் எனவும் கூறி இருந்தாளாம். அவரிடமும் அவை இல்லாததினால் ஒரு வேளை என்னிடம் பழையது ஏதும் இருக்கும் என்ற நம்பிக்கையில் என்னிடம் வந்தார். என்னிடம் மட்டும் அல்ல என்னுடன் அந்த இடத்திற்கு வந்திருந்த எந்த நண்பர்களிடமும் கால் சட்டை இல்லை. எங்களுக்கு குபுக் என சிரிப்பு வந்தது. ஏன் எனில் ஐரோப்பிய நாகரீகத்தில் வளர்ந்தவர்கள் எவரிடமும் அவசரத்திற்கென ஒரு கால்சட்டைக் கூட வைத்திருக்கவில்லை எனும் பொழுது சிரிப்பு வராமல் என்ன செய்ய முடியும்.

இருபது வருடங்களுக்குப் பிறகு நான் அதே அருணாசலாவின் மலை அடிவாரத்தில் பிரமாதமான தோட்டத்தில் அமைந்து இருந்த பெரிய பங்களாவில் இருந்தேன். கையில் 2000 அமெரிக்க டாலர் விலை மதிப்பான கணினிப்பொறி (லேப்டாப் கம்ப்யூட்டர்) , தோட்டத்தில் செடி கொடிகளுக்கு நீர் உற்ற தோட்டக்காரன் என அனைத்து வசதிகளும் இருந்தன. என்னை நானே பார்த்துக் கொண்டேன். நான் போட்டிருந்தது கால் சட்டை என்ற பேண்ட். வாழ்க்கை சக்கரம் சுழன்றது. என் வளமான வாழ்க்கை மாறுதல் எனக்கு மன அமைதியைத் தரவில்லை. நான் இருபது ஆண்டுகள் முன்பு பெற்றிருந்த மன இன்பம் அப்பொழுது இல்லை. 1970 ஆம் ஆண்டு எளிய வாழ்வை வாழ்ந்து பார்க்க வேண்டும் என்ற ஆவலினால் அங்கு வந்தேன். அப்பொழுது எனக்கு எந்த தேவையும் இல்லாமல் மிகவும் மகிழ்சிகரமான வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டு இருந்தேன். நான் செய்த அனைத்திலும் மனத் திருப்தி

**ஆலயத்தில் ஒரு வாழ்க்கை**

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

**மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்**

---

**டேவிட் காட்மன்**
**(DAVID GODMAN)**

**தமிழ் மொழி பெயர்ப்பு**

---

**சாந்திப்பிரியா**
**(SANTHIPRIYA)**
(nrj_1945@yahoo.com

**ஆலயத்தில் ஒரு வாழ்க்கை**

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

**மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்**
-----------------------
**டேவிட் காட்மன்**
**(DAVID GODMAN)**

**தமிழ் மொழி பெயர்ப்பு**
-----------------------
**சாந்திப்பிரியா**
**(SANTHIPRIYA)**
(nrj_1945@yahoo.com

இருந்தது. எனக்கு தேவையான அனைத்தும் கிடைத்தது.

இந்துக்கள் தபம் செய்வதுண்டு . அப்படி செய்கையில் அனைத்தையும் துறந்து விட்டு உடலை வருத்திக் கொண்டு தபம் இருந்த பின், பாவங்களைத் தொலைத்தப் பின் தன்னை அழித்துக் கொண்டு விடுவதுண்டு. 1970 ஆம் ஆண்டில் நான் தண்ணீர் இல்லாத, பாழடைந்த இடத்தில் , வெளிச்சமும் இல்லாமல் வாழ்ந்து வந்ததைக் கண்ட பலர் நான் தபம் செய்து வருவதாகவும் ஒரு ஞானி ஆகி விடுவேன் என்றும் நினைத்திருந்ததாக பின்னர் என்னிடம் பலரும் கூறினர். ஆனால் நான் அப்படி ஆகவில்லை. எனக்கு அந்த வாழ்க்கைப் பிடித்திருந்தது. அதனால் அப்படி இருக்க முடிவு செய்து இருந்தேன். அந்த காலகட்டத்தை நினைக்கும் பொழுதெல்லாம் அவை இனிமையான நினைவுகளாக இருந்தன. நான் உண்மையிலேயே அப்படி அமைதியாக, கோவப்படாமல், இருந்திருப்பேனா இல்லை என் நினைவுகள்தான் என்னை ஏமாற்றுகின்றதா ? எனக்குத் தெரியவில்லை. ஆனால் நடந்த நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கூறுகின்றேன். நீங்களே முடிவு செய்யுங்கள்.

நவம்பர் மாதம் மழை பொழிந்து சாலைகளில் தண்ணீர் ஓடும். நான் இருந்த கட்டிடத்தின் மேல் வளர்ந்து இருந்த சில ஆலமரத்தின் வேர்கள் சுவற்றைத் துளைத்துக் கொண்டு பிளவை ஏற்படுத்தி இருந்ததினால் அறைக்குள் தண்ணீர் சொட்டத் துவங்கும். சரி வர படுக்க முடியாத அளவு நீர் வந்து விடும். அதை என் வேட்டியால் துடைத்து எடுத்து பிறகு படுப்பேன். அறையில் நீர் நிறைந்து விட்டால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை வாளியினால் அதை எடுத்து வெளியில் கொட்டினால்தான் இருக்க முடியும் என்ற நிலை. சில நாட்களில் இரவில் தூங்காமலேயே கூட இருக்க வேண்டி இருந்தது. அது என்னை கஷ்டப்படுத்தியதாகவோ இல்லை வெறுப்பை ஏற்படுத்தியதாகவோ நான் நினைக்கவில்லை. எனக்கு நினைவில் இல்லை. அப்படிப்பட்ட ஒரு வாழ்வு இருந்த பொழுது அதை அப்படியே ஏற்றுக் கொள்ளப் பழகி இருந்தேன். அதனால் அந்த இடத்தில் இருக்க முடியாது என்றோ, வேறு இடம் பார்க்க வேண்டும் என்றோ நான்

## ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*


மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
-----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
-----------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com


நினைக்கவில்லை.

நான் இருந்த இடத்திற்கு ஒட்டினாற் போல வயல்கள் இருந்தன. அவைகளில் மழை காலங்களில் மட்டுமே பயிரிட முடிந்ததினால் மற்ற நேரத்தில் வேர்கடலையை பயிரிட்டு வந்தனர். அதற்கு அத்தனை உரமும் தண்ணீரும் தேவைப்படாது. மழை வந்தவுடன் அந்தப் பயிர்கள் செழித்து வளரும் என்பதினால் அவற்றை எந்தப் பிராணிகளும் வந்து தின்றுவிட்டுப் போகாமல் இருக்க காவலுக்கு தங்களுடைய குழந்தைகளை அனுப்புவது உண்டு. ஆனால் அந்த இடங்களில் சுற்றித் திரிந்த காட்டுக் குரங்குகள் அங்கு வந்து அந்தப் பயிர்களை வேருடன் பிடுங்கி தின்னத் துவங்கும். அந்த குழந்தைகள் ஓடிவந்து அவற்றைத் துரத்தி அடிக்கும். அப்படிப்பட்ட காட்சிகளைக் காணச் சிறந்த இடமாக என்னுடைய ஆலயம் அமைந்து இருந்தது. ஆனால் என்னுடைய இடத்தில் இருந்த சுவற்றில் இருந்து இறங்கிச் சென்று அவற்றைத் துரத்த இரண்டு நிமிடங்களுக்கு மேல் பிடித்ததினால் அவை அந்த இரு நிமிடத்தில் சில செடிகளை பிய்த்துக் கொண்டு ஓடிவிடும். ஆகவே அந்த சிறுவர்களில் ஒரு பகுதியினர் என் வீட்டுக் கூரையிலும் இன்னொரு பிரிவு எதிர்புறத்திலும் அமர்ந்து கொண்டு கற்களை வீசி எறிந்தபடி அவற்றைத் துரத்துவார்கள். அந்த சிறுவர்கள் ே கத்திக் கொண்டும் பாத்திரங்களில் மூலம் ஓசை எழுப்பியும் குரங்குகளைத் துரத்தும் பொழுது போடும் கூச்சலினால் என் தியானம் தடைப் பெறத் துவங்கியது. ஆனால் அவற்றைப் பொறுத்துக் கொண்டு மூன்று வாரங்கள் இருந்து பயிர் அறுவடை ஆனதும் எனக்கு அவர்கள் தந்த கடலையை தின்பது ஆனந்தமாக இருந்தது.

அந்த சீசன் முடிந்ததும் அந்த சிறுவர்களுக்கு வேறு வேலைக் கிடையாது. நான்தான் அவர்களுக்குக் கிடைத்த ஒரே காட்சி. ஒரு ஐரோப்பிய சிறுவனிடம் அத்தனை நேரம் கிடைத்தால் அவன் டி.வீ சேனல்களைத் மாற்றி மாற்றிக் கொண்டு படம் பார்க்க அலைவான். ஆனால் அந்த பகுதியில் இருந்த சிறுவர்களோ எந்த விதமான சலனமும் இன்றி மணிக் கணக்காக அமர்ந்தபடி என் அறையினுள்ளே நான்

ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

TEMPLE TIMES

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்

------------------------

டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு

------------------------

சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com

தியானத்தில் இருக்கும் பொழுது என்னையே நோக்கியபடி அமர்ந்து கொண்டு இருப்பார்கள். நான் கால்களைக் குறுக்காக மடித்து வைத்தபடி அமர்ந்து கொண்டு சில மணி நேரம் தியானத்தில் அமர்ந்து இருப்பது உண்டு. அப்பொழுது நான் எதேற்சயாக என் முக்கை துடைத்துக் கொண்டாலோ கால்களை மாற்றி வைத்துக் கொண்டாலோ போதும் "வெல்லிக்காரி.... என்று அதாவது வெள்ளையன் மூக்கை சொரிந்து கொள்கின்றான் ,, கால்களை மாற்றி வைத்துக் கொள்கிறான் " என்ற பெரும் ஆரவாரம் வெளியில் இருந்து கேட்கும்.

அதுமட்டும் அல்ல, நான் வெளியில் சென்று அடர்ந்த புதர்களின் அடியில் அமர்ந்து கொண்டு சிறுநீர் கழித்துத் திரும்பும் பொழுதும் " வெள்ளையன் சிறு நீர் கழித்துவிட்டு வருகிறான் " என்ற கூச்சல் கேட்கும். ஆக நான் செய்த ஒவ்ஒரு வேலையையும், -- மூக்கை சொரிந்தது, கால்களை மாற்றிப் போட்டுக் கொண்டது மற்றும் சிறுநீர் கழிக்கச் சென்றது என அனைத்தும்-- அந்த சிறுவர்களுடைய பெற்றோர்களிடம் சென்று அவர்கள் கூறி இருந்தனர் என்பதை பின்னர் ஒரு நாளில் என்னுடன் பேசிய கிராமத்தானிடம் இருந்து அறிந்து கொண்டேன். அவனை அதற்கு முன்பு நான் அங்கு பார்த்ததே இல்லை.

கடலைப் பயிரிட்ட பொழுது இப்படியாக அந்த சிறுவர்களுடன் நான் விளையாடிக் கொண்டு இருந்ததும் அவர்களும் என்னிடம் வந்து விளையாடியதும் அந்த கடலை அறுவடை ஆனப் பின் நின்றுவிட்டது. அவர்களுடைய கூச்சல் இன்றி அந்த இடமே அமைதியாக காட்சி தந்தது.

இதனிடையே சுமார் இரண்டரை மைல் தொலைவில் இருந்த இரமண மகரிஷி ஆசிரமத்தில் நான் சேவைசெய்யத் துவங்கினேன். தினமும் அங்கிருந்தவாசகசாலைக்குச் சென்று இரண்டு மணி நேரம் இருந்து விட்டு மதியம் வீடு திரும்புவேன். அந்த நிகழ்ச்சிகளை நான் நினைத்துப் பார்க்கும் பொழுது எத்தனை மெதுவாக என் தின வேலைகளில் ஈடுபட்டு இருந்திருக்கின்றேன் என்பது வியப்பாக இருக்கின்றது. ஒரு சைக்கிள் இருந்திருந்தால் சில

**ஆலயத்தில் ஒரு வாழ்க்கை**

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
-----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com)

நிமிடங்களில் அந்த இடத்திற்கு சென்று விடலாம் என்றாலும் கூட நான் அமைதியாக மெதுவாக நடந்து செல்வதையே விரும்பி இருந்திருக்கின்றேன்.

என்னுடைய நண்பன் ஒருவள் அந்த வாசகசாலையை கவனித்து வந்தாள். அவள் சில நாட்கள் ஊரில் இல்லாத பொழுது அவளுடைய வேலையை நான் கவனித்துக் கொண்டேன். நான் சில வாரங்கள் அங்கு தங்குவேன் என எதிர் பார்த்து இரமணாசிரமத்தில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்தேன். ஏன் எனில் 100 டிகிரிக்கும் மேலாக இருந்த அந்த வெப்ப காலத்தில் இரண்டு மைல் நடந்து வருவது சிரமமாக இருந்தது. ஆனால் ஊருக்குப் போன என்னுடைய நண்பீ திரும்பி வரவே இல்லை என்பதினால் நானே அந்த வாசகசாலையை பல வருடங்களுக்கு கவனிக்க வேண்டியதாயிற்று. 1978 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரை பல மணிநேரம் உழைத்து அந்த வாசக சாலையை சீரமைத்தேன்.

சில மாதங்களஅங்கிருந்தப் பின மீண்டும் நான் அந்த பாழடைந்த ஆலயத்தில் குடியேற முடியாது என்பதை உணர்ந்தேன். ஆகவே அங்கு சென்று படுக்கை, சமையல் பாத்திரங்கள், புத்தகம் மற்றும் சில துணிகளை என்னுடன்



*1981 ஆம் ஆண்டில் பனியன் வேட்டியுடன் புதிய இரமணாஷ்ரம வாசகசாலைத் திறப்பு விழாவில் நான்*

## ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*


மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
-----------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com)


எடுத்துவரச் சென்ற பொழுது தாப்பாள் திறந்து இருந்தது. அங்கிருந்த அனைத்துப் பொருட்களும் களவாடப்பட்டு விட்டன என நினைத்தவாறே உள்ளே சென்றேன்.

ஆனால் என்னுடைய சாமான்கள் எதுவும் திருடப்படவில்லை. நான் வீட்டிற்கு உள்ளே போட்டிருந்த வித்தியாசமான பூட்டு மட்டும் களவு போய் இருந்தது. திருட வந்தவர்கள் அந்தப் பூட்டைத் தவிற உபயோகமான வேறு எதுவும் என்னிடம் இல்லை என்பதை உணர்ந்து கொண்டு போய் இருக்க வேண்டும். அதை நினைத்த பொழுது திருடர்கள் எப்படி ஏமார்ந்து போய் இருந்திருக்க வேண்டும் என சிரிப்பு வந்தது. இன்னும் சில நாட்கள் பொறுத்தப் பின் அங்கு சென்று பார்த்த பொழுது அந்தக் கதவையும் திருடர்கள் திருடிக் கொண்டு போய்விட்டனர் எனத் தெரிந்தது. மீண்டும் அந்த ஆலயம் பாழடைந்த இடமாயிற்று.

அந்த இடத்தில் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு சிவனுக்குத் தன் கண்களை தானமாகத் தந்த கண்ணப்பர் என்ற முனிவர் இருந்ததாகக் கேள்விப் பட்டேன். ஆனால் தன்னுடைய பக்தன் எத்தனை சிறந்தவன் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டவே சிவபெருமான் ஆடிய நாடகம் அது. அதை

எதற்காக கூறினேன் என்றால் அதற்கும் ஒரு சம்மந்தம் இருந்தது.

நான் அந்த ஆலயத்தில் இருந்து வெளியேறி ஒரு வருடத்திற்குப் பின் சான்திமலை டிரஸ்ட் என்ற ஜெர்மனியை சார்ந்த குழுவினர் அந்த ஆலயத்தைப் புதப்பிக்க அங்கு வந்தனர். அங்கு சென்ற அவர்கள் அந்த இடத்தில் கண்ணப்பரின் ஒரு புதிய சிலையை நிறுவ இருந்தனர். ஆனால் அதற்கு அவசியம் ஏற்படவில்லை. அங்கிருந்து உண்மையான சிலையை திருடிக் கொண்டு போய் அங்கிருந்து சுமார் இரண்டரை கல் தொலைவில் இருந்த ஆதி அண்ணதமலை என்ற ஊரில் வசித்துக் கொண்டு இருந்த திருடன் அதை அவர்களிடம் திரும்பக் கொண்டு வந்துத் தந்து விட்டான். அதற்குக் காரணம் அந்த சிலையை அவன் திருடிக் கொண்டு போன பின் அவனுடைய கண் பார்வை

## ஆலயத்தில் ஒரு வாழ்க்கை

**TEMPLE TIMES**

*இந்த கட்டுரையில் ஆலயத்தில் தான் தங்கி இருந்த பொழுது தனக்கேற்பட்ட அனுபவங்களைத் தெரிவித்து உள்ளார் டேவிட் காட்மன்*

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com)

மெல்ல மெல்ல மறையத் துவங்கி அனேகமாக கண் பார்வையை இழக்கும் அளவில் சென்று விட்டது. அதற்குக் காரணம் அந்த முனிவருடைய சாபம் என்று நினைத்தானோ என்னவோ அந்த பழைய சிலையைத் தானே கொண்டு வந்து தந்து விட்டான். அதன் பிறகு பழுதடைந்த அவனுடையப் பார்வை தன்னால் சரியாகி விட்டதாம். இதை என்னவென்று கூறுவது ? தற்செயலாக நடந்ததா இல்லை அந்த கிரமத்தினர் நம்புவது போல கடவுள் தன்னுடைய உண்மையான சக்தியைக் காட்டியதின் அடையாளம் என்பதா? ஆனால் அதற்குப் பிறகு அங்கு வந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் அந்த சிலையை ஆராய்ந்துப் பார்த்தப் பின் அது கண்ணப்பருடைய சிலை அல்ல வேறு ஒரு தேவதையின் சிலை என உறுதிப்படுத்தி கண் கொடுத்த கண்ணப்பருக்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை என தெரிவித்தார்.